ஸ்ரீ காளஹஸ்தி தல மகிமை



ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீகாளஹஸ்தி, சித்தூர் மாவட்டம். ஆ.பி.

Rs. 5.00




லிங்கோத்பவமூர்த்தி

32/2

ஓம்நமசிவாய

ஸ்ரீகாளஹஸ்தி தலமகிமை



ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம்
ஸ்ரீ காளஹஸ்தி - 517 644, A.P.
Ph : 08578-222240

ரூ. 6-00

எனதுறை

சைவத்தின் மேல் சமயம் வேறுஇல்லை என்பது நாவலர்கள் வைக்கு, சைவவேதம் ஆகிய திருக்குறள் கொள்கை விளக்காத்தாலும் தோத்திரம் ஆகிய பன்னிரு திருமுறைகள் அனுபவத்தாலும் சாத்திர மாகிய மெய்கண்ட நூல்கள், தருக்கதாலும், இந்த உண்மையை, பறை சாற்றுகின்றன்.

திருசிற்றம்பலம்

சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நான்கும் சைவ சமய வழிப்பாடு முறைகள், ஞானத்தில் சரியைம் ஞானத்தில் கிரியைம் நானரில் ஞானம் ஞானத்தில் யோகம். ஆகிய நிலைகளில் முறையே நின்று நமக்கு தேவார திருவாசகங்களை அருளியவர்கள் நால்வர் அவர்களே, திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், திரு. சுந்தரர், திரு-மாணிக்கவாசர் ஆகியோர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று வாழிகாட்டிய இவர்கள், **பஞ்சபூததலங்களில்** வாயுஸ் தலம், ஆக மிகவும் சிறப்பு பெற்ற திரு காளஹஸ்த்தி தல வரலாறு தெலுங்கில் இருந்து தமிழ்மொழி பெயர்ப்பை என்னிடம் கொடுத்தார்கள் அந்த வகையில் எனக்கு தெரிந்த சில குறிப்புகளை இதில் தெரிவித்து உள்ளேன்.

 32/2

உ

காவாய்கனக திறலே போற்றி !
காளத்தி மலையானே போற்றி ! போற்றி !!

ஸ்ரீ காளஹஸ்தி பட்டணம் சித்தூர் மாவட்டம் ஆந்திர மாநிலத்தில் உள்ளது. கலியுக தெய்வம் ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி திருப்பதியில் இருந்து 40 கீ.மீ. தூரத்தில் இருக்கிறது. காளஹஸ்திரி கோவிலில் இருந்து 3 கீ.மீ. ரயில் நிலையம் உள்ளது. திருப்பதியில் இருந்தும் சென்னையில் இருந்தும் 24 மணி நேரம் பஸ் வசதி உண்டு.

வரலாறு :

கி.பி. 1-2 ஆண்டுகளில் எழுதிய வரலாறுகளில், ஸ்ரீ காளஹஸ்தி தென் கயிலாயம் என்று கூறப்படுகிறது. கி.பி. 2ம் ஆண்டுகளில் 7ம் ஆண்டுகளில் 63, சைவநாயன்மார்கள் இவர்களில், முக்கியமான அப்பர், சுந்தர், திருஞான சம்பந்தர், மாணிக்கவாசகர் அவர்கள் இக்கோயிலில் வழிபாடு செய்துள்ளார்கள். பாடல் பெற்ற ஸ்தலமாகும், கி.பி. மூன்றாம் ஆண்டுகளில் நக்கீரர், (பொய் அடிமை இல்லா புலவர்) ரத்தின மாலைகளாக (100) நூறு பாடல் எழுதி உள்ளார்.

இத்தகைய வரலாறு பற்றியும் இத்தலத்தின் மகிமையும், தீர்த்தங்கள் மகிமைபற்றிய குறிப்புகள் எடுத்து கொண்டு வாய்ப்பு கிடைக்கும் போது அக்குறிப்புகளை படித்து அவற்றின் பெருமைகளும், இறைவனின் கருணையும் என்னி பார்த்து மகிழும் அருள் அனுபவம் பெற்றுவந்தேன். தெலுங்கு மொழியில் இருந்த புத்தகத்தை தமிழில் மொழி மாற்றம் செய்து எனக்கு தெரிந்த அளவில் செய்து உள்ளேன். கயிலை பாதி, காளத்தி பாதி என்று இப்பாடலில் குறிப்பிட்டு உள்ளனர். ஸ்ரீ காளஹஸ்தி திருக்கோயில் பற்றி ஜெகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆதிசங்கராச்சாரியர் இக்கோவிலுக்கு வருகை தந்து சுவாமி தரிசனம் செய்து அம்மாள் எதிரில் ஸ்ரீ சக்கரம் பிரதிஸ்டை செய்தார் அவரே ஸ்படிக லிங்கம் இத் திருகோவிலில்

பிரதிஷ்ட்டை செய்தார். பாண்டவர்கள் தோழர்கள் மற்றும் விஜயநகர ராஜாக்கள் காலத்தில் சில் பங்கள் நிறுவனர். (கி.பி.) 1516ல் ஸ்ரீ கிருஷ்ண தேவராயர், பெரிய கோபுரம் 100 கால் மண்டபம், ராயல் வாரி மண்டபம் இவைகள் அவரே நிறுவினார்.

திருக்கோவில் பூஜை முறைகள் :

இத்திருக்கோவிலில் வைதிக, ஆகமம், முறையில் நான்கு கால பூஜைகள் நடக்கிறது. காலை சந்தி 7 மணிக்கும், இரண்டாம் காலை 9.00 மணிக்கும், உச்சிகாலம் 10.30கும், பிதோஷ காலம் 5 மணிக்கும் சுவாமி அம்பாளுக்கு தினந்தோறும் நடக்கும் அபிஷேகங்கள் இங்கு பரத்வாஜ ரிஷி வம்ச கோத்திரத்தில் உள்ளவர்கள் இங்கு ஆச்சாரிய தீட்சை பெற்று சிவன் ராத்திரி 10 நாட்கள் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் நவராத்திரி அம்பாள் திருவிழாவிற்க்கு விசேஷ அபிஷேகங்கள், ஆராதனைகள் நடத்தி வைப்பார்கள் மற்றும் ஆண்டு தோரும் இரண்டு முறை, கயிலை பிரதஷ்னம் (மலைசுற்று) கிரிவலம் வரும். ஜனவரி மாதம் மாட்டு பொங்கள் அன்றும் சிவராத்திரி 9 நாள் திருவிழா நாளிலிலும் கிரிவலம் வரும் நாட்கள் இவை. தென் கயிலை, தென்காசி, சிவபெருமாள் தவம் செய்த பிரம்ம தேவன், கயிலை உள்ள சிகரத்தில் முக்கிய மான சிவனைந்த நிலையம் சிகரத்தை ஸ்ரீகாளஹஸ்தி திருக்கோயில் நிறுவினர்.

சிவபூஜை செய்து மணமகிழ்ச்சி அடைந்தேன் :

இதனால்தான் ஸ்ரீகாளஹஸ்தி மலைக்கு தென்கயிலாயம் என்று பெயர் வந்தது. ஸ்ரீகாளஹஸ்தி கோயிலில் சேர்ந்து உள்ள (சொர்ணமுகிநதி) பொன்முகலி என்று நதி உத்திரவாகனி ஆக நதி ஓடுகிறது. திருமஞ்சனம், கோபுரம் எதிரில் நீராடும் கட்டம் திருமஞ்சன கோபுரம் அருகிலுள்ள நீராடும் கட்டம் பெயர் **மணிகர்ணிகா** என்று பெயர். காசியில் இங்குபோலவே உத்திர வாஹினி நதியாக **மணிகர்ணிகா** நீராடும் கட்டம் இருப்பதளால் இத்தலத்திற்கும் தென்காசி என்று பெயர் வந்தது.

32/2

திருக்கோவில் கட்டுமான பணி :

தென் இந்தியாவில் இருக்கும் திருக்கோயில்களில் ஸ்ரீகாளஹஸ்தி திருக்கோயில் கட்டிடத்தில் பிரத்தியோகம் உள்ளது. இங்கு கணபதி ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர். தட்சணாமூர்த்தி அம்மாள் ஒவ்வொரு மூர்த்திகளும் வேறு வேறு திசையில் இருக்கிறார்கள் இதைவைத்து பார்க்கும் போது ஜீவராசிகளுக்கு மூலமான தர்மமார்த்த கமாமோட்சத்திற்க்கு சதுர்வேத புருஷோர்த்தம் குறிப்பின் படி இத்திருகோயில் மனசை இழக்கும் என்ற நம்பிக்கை முதல் தர்மம் ஆத்ம தரீமம் வடக்கு முகமாக பாதாள கணபதி உள்ளது. இரண்டாவது ஆர்தம ஆத்மஞான உபதேசம் பெற்ற உமாதேவி கிருபையானா ஸ்ரீ ஞான பிரசுணாம்பிகை கிழக்கு முகமாக நன்று அருள் போதிக்கிறாள். மூன்றாவது காமம் தட்க்ஷனமுகமாக இருக்கும் கோயில் வாசல் மேதாதட்கூணாமூர்த்தி குரு சொரூபத்தில் ஜீவன்கள் சித்தி பெற்று இருப்பது தெரிகிறது.

கடைசியில் மோடச்ம் மோட்க்ஷாதிகாரி பரமேஸ்வர ரூபத்தில் ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரர் மேற்கு முகமாக நின்று அஸ்திமம் நின்று ஜீவன்களுக்கு மரணகாரணம் மோட்க்ஷத்தை கொடுக்கிறார் உடனுக்குடன் மனோவாஞ் சாதனைமான தர்மாத்த காம மோக்ஷத்திற்கு ஸ்ரீகாளஹஸ்தீஸ்வராலயம் இருக்கிறது.

மஹாத்தியம் :

ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரசுவாமி சுயம்பு ஸ்ரீ என்றால் சிலநதி. கால என்றால் பாம்பு. ஹஸ்தி என்றால் யானை. இந்த மூன்று ஜீவன்களுக்கும் சிவ பக்தியால் சிவனிடம் ஐகயமானார்கள். இதனால் சுவாமியின் பெயர் ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர் என்றும் ஊரின் பெயர் ஸ்ரீகாளஹஸ்த்தி என்றும் பெயர் வந்தது.

சிலந்திபத்தி :

திரேத யுகத்தில் சிலந்தி பூச்சி தன்னுடைய உடம்பில் இருந்து வரும் நூலினால் மலைமேலுள்ள சிவபெருமானுக்கு கோயில் கோபுரம் பிராகாரம் கட்டி சிவபெருமானை பூஜை செய்தது. வேக காற்று அடிக்கும் போது எல்லாம் நூல் அறுந்து விடும் மறுபடியும் கூடுகட்டிவிடும். இம்மாதிரியான சிவ சேவை செய்து வந்தது. ஒருநாள் சிவ பெருமாள் திருவிளையாடல் அங்கு எரியும் தீபத்தில் எறிந்து சிலந்தி கட்டிய கோயில் கோபுரம் எறிந்து சாம்பலாகும்படி செய்தார். இதை பார்த்த சிலந்தி எரியும் தீபத்தை மிழுங்முவதற்க்கு போனது. சிவ பெருமான் காட்சி அளித்து சிலந்தியின் பக்தியை பார்த்து வரம் என்ன வேண்டும் என்றார். அப்பொழுது சிலந்தி எனக்கு மறு ஜென்மம் இல்லாமல் செய்யவும் கோரியது. அதற்க்கு சிவ பெருமான் சம்மதித்து சிலந்தியை தன்னுடன் ஐக்கியமாக்கி கொண்டார்.

நாகம் - யானை :

யானையும் பாம்பும் பூஜை செய்தது. ஒரு நாகம் பாதாளத்தில் இருந்து பெரிய மாணிக்கங்களை எடுத்து வந்து தினமும் சிவ பெருமானுக்கு பூஜை செய்து கொண்டு இருந்தது. திரேத்தயுகம் இருந்து துவாபரயுகம் வந்தது. அப்பொழுது யானை, சிவபெருமானுக்குபூஜை செய்து அது சொர்ணமுகி நதியில் நீராடி தும்பிக்கையில் தண்ணீர், புஷ்பம், வில்வம் எடுத்து. பாம்பு செய்த்து மாணிக்கத்தை கீழே தள்ளிவிட்டு தான்(யானை) வந்தது வந்த தண்ணீரை அபிஷேகம் செய்து புஷ்பத்துடன் பூஜை செய்து தினமும் சென்று கொண்டு இருந்தது. மறுநாள் காலை, பாம்பு வந்து பார்த்து தான் வைத்து சென்ற மணிகளை தல்லிவிட்டு வில்வம், புஷ்பம் யார் செய்தார்கள் என்று அதை பார்த்து மனதில் மிகவும் வேதனை பட்டது. (மறுபடியும்) யானை செய்த பூஜை வில்வம் புஷ்பம் அனைத்தையும் தள்ளிவிட்டது. அதன் பிறகு தான் எடுத்த வந்தது (பாம்பு) மாணிக்கத்தை பூஜை செய்து

விட்டு சென்றது. மறுபடியும் யானை வந்து அதே போல் (மேல் கூறியவாறு) செய்தது. இப்படி சிறிது காலங்கள் கழிந்தன, (பாம்பு) செய்த பூஜை யானை செய்த வழிபாடுகள் மாறி மாறி பூஜைகள் செய்து சில காலங்கள் கழிந்தன.

ஒரு நாள் பாம்பு பகைகொண்டது. தாம் செய்த பூஜையை கல கலைத்தது யார் என்று கோபம் வந்தது. இந்த விஷயத்தை கண்டு பிடிப்பதற்க்கு உள்ள புற்றில் மறைந்து இருந்தது. யானை தினமும் பூஜை கலைப்பது போல் தன்னுடைய பூஜையை ஆரம்பித்தது. தும்பிக்கையால் மணி மாணிக்கத்தை கீழே தள்ளியது. அதை கவனித்த பாம்பு கோபத்தால் தனத எதிரியான யானை தும்பிக்கைகுள் பாம்பு உள்ளே சென்று கும்பளத்தில் மூச்சி விடமுடியாதபடி செய்தது. இந்த பாதையால் யானை ஈஸ்வரதியானத்தில் தும்பிக்கையால் சிவலிங்கத்தை தொட்டு வழிபாடு செய்து தலையை கல்லில் கெட்டியாக இடித்து மரணமடைந்தது. இந்த நிகழ்வில் யானை தும்பிக்கையில் இருந்த பாம்பும் இறந்தது. இப்படி இருவரும் தம்முடைய நிஜ சுருப்பலத்தில் சிவகணங்களாக மாறி சுவாமியுடன் ஐக்கியமானார்கள். இந்த நிகழ்ச்சியின் சின்னமாக காளம் என்ற ஐந்து தலை பாம்பு சிரசில் யானை சின்னமாக இரண்டு தந்தங்களையும் சிலந்தி சின்னமாக அடி பாதத்தில் லிங்காகாரத்தில் சேர்த்து கொண்டார் இதனால் ஸ்ரீ காளஹஸ்தி என்று பெயர் வந்தது.

ஸ்ரீ ஞானபிரசுனாம்பிகை :

பார்வதி தேவிக்கு பரமசிவன் பஞ்சாச்சரி மந்திரத்தை போதித்து சந்தோஷத்தில் அமைதியாக ஜபம் செய்யும் போது தேவிக்கு முன்புத்தியால் எதை செய்கிறோம் என்று தெரியாமல் அப்பொழுது சிவ பெருமானுக்கு கோபம் வந்து தேவிக்கு பூலோக பூலோகத்தில் ஸ்ரீ யாக பிறப்பதற்க்கு சாபம் கொடுத்தார் அப்பொழுது சாப விமோசனத்திற்க்கு சிவனிடம் வேண்டிக்கொண்டு பூலோகத்தில் கயிலாசகிரியில்

சிவலிங்கத்தை வழிபாடு செய்யசொல்லி பார்வதி தேவிக்கு நாரதருடைய துணையால் பூமிக்கு வந்து தவம் செய்தாற் சிவ பெருமான் காட்சி அளித்தார் அவளை தனது அர்த்தாங்கி யாக்கி அர்த்தானாரீஸ்வரராக நின்றார். அப்பொழுது இருந்து ஞானபூங்கோதையாக ஸ்ரீகாளஹஸ்தியில் அருள் பாலிக்கிறார்.

வாயுலிங்கம் :

பஞ்சபூதலிங்கங்கலில் ஸ்ரீ காளஹஸ்தி சிவலிங்கம் வாயு லிங்கம் மிகவும் சக்தி வாய்ந்தது. காஞ்சியில் ஏகாம்பரர், புருத்திவிலிங்கம், திருவானைக்காவல், ஜலலிங்கம், திருவண்ணாமலை தேஜோலிங்கம், சிதம்பரம் ஆகாசலிங்கம் ஸ்ரீகாளஹஸ்தி வாயுலிங்கம், திரேதயுத்தில் இங்கு சுவாமி வாயு ரூபத்தில் மகா யோகிகளுக்கு சாப அலங்காரத்தில், காட்சிதந்தாரம். திரேத யுகத்தில் சுவர்ணரூபம் துவோபர யுகத்தில் ரஜித்த ரூபம் இப்பொழுது கலியுகத்தில் சுவேத சிலா ரூபத்தில் இருந்தும் தன்னுடைய நிஜரூபமா தன்னுடைய வாயுரூபத்தில் இருந்தும் தன்னுடைய நிஜரூபமா தன்னுடைய வாயுரூபத்தில் இருந்ததால் கர்பகிரதத்தில் சுவாமிக்கு வலது பாகத்தில் இரண்டு தீபங்கள் எப்பொழுதும் எறிந்து கொண்டு இருக்கும் இதை சுவாமி சன்னதியில் கவனிக்கவும்.

கோபுரம் :

இத்திருக்கோயிலுக்கு நான்கு புரம் கோபுரம் இருக்கிறது. இது மட்டுமல்லாமல் ராஜ கோபுரம் 122 அடியும் உயரம் உள்ளது. இதை ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் கி.பி. 1516ல் கட்டினார் என்று கல்வெட்டு தெரிவிக்கிறது. சுவாமி மாட வீதீக்கு செல்லும் போது இங்கு தீபாராதனை முடிந்த நான்கு மாட வீதீகளில் முடிந்து பிட்சுவாரி கோபுரம் வரும் ஜங்கம் ரூபம் சிவபெருமானை பக்தியுடன் தேவதாசி வேண்டினால் பிக்ஷசை எடுத்து கோபுரம் கட்டினார் என்று சொல்லப்படுகிறது. இந்த

கோபரத்தை கட்டியது யாதவ நரசிங்ககாலத்தில் என்று சொல்லப்படுகிறது.

கிழக்கு திசை பார்த்து ஆலய பிரவேச கோபுரம் இதன் பெயர் பால ஞானாம்பிகா கோபுரம் வடக்கு கோபுரம் சிவய்யா கோபுரம் மேற்கு கோபுரத்தை திருமஞ்சன கோபுரம் இந்த கோபுரத்தின் இடதுபக்கத்தில் சூர்ய புஷ்ககரனி உள்ளது. வலது பக்கத்தில் சந்திர பூஷ்கரணியும் உள்ளது. சுவாமி அம்மாள் அபிஷேகத்திற்கும் மடப்பள்ளிக்கும் இந்த சூர்ய புஷ்க்கரனியில் இருந்துதான் தீர்த்தம் எடுத்து செல்வார்கள் இந்து மேற்கு கோபுரவாயிலாக பொன்முகிலி நதிக்கு செல்லலாம். தெற்கு கோபுரம் வாயிலாக காளத்தி மலை (கண்ணப்பர்) மலைக்கும் பிரம்ம கோயிலுக்கும் செல்லலாம்.

சுவர்ணமுகி நதி :

அகஸ்திய மகரிஷி தனது சிஷ்யர்களுடன் தெற்கு நோக்கி வந்து தவம் செய்து கொண்டு இருந்தனர். அப்பொழுது அவர்களுக்கு தண்ணீர் வேண்டி பிரம்மாவை பார்த்து கடும் தவம் செய்தார்கள் பிரம்மா அனுக்கரமாகி ரிஷிதவத்தை மெச்சி ஆகாசகங்கை வினியோகம் செய்தார் கங்கா தேவி சுவாணமுகியின் ரகசியம் அகத்தியர் மலையில் அவதரித்தது. இந்த நதி உத்திரவாகினியாக ஸ்ரீகாளஹஸ்தி மார்க்கமாக சென்று கிழக்கு கடற்க்கறையில் கலக்கிறது. இந்த நதியில் எததனையோ தீர்த்தங்கள் கலக்கின்றன.

கண்ணப்பர் :

அர்ஜுனன், பரமேஸ்வர் அனுக்கிரகத்தால் கலியுகத்தில் திண்ணனன் என்று பெயரில் ஜென்மித்தான். பொத்தப்பி நாடு என்று ஆந்திர மாநிலத்தில் உடும்மூர் என்ற ஊர் அந்த ஊரில் வேடர்குடில்கள் உள்ளது. அங்கு நாகன்தத்தை தம்பதியருக்கு சிவன் அருளால் ஆண் குழந்தை பிறந்தது. அந்த

குழந்தைக்கு திண்ணனன் என்று பெயரிட்டார்கள். அவன் வில வித்தையில் மிகவும் தேர்ச்சி பெற்றான். ஒரு நாள் வேட்டையாடி மிகவும் சோர்வுற்றான் மரத்தின் அடியில் தூங்கினான். அப்பொழுது அவன் கனவில் சிவ பெருமான் சொன்னார் நான் இந்த மலை அடிவாரத்தில் தாழும்பு கறை ஓரமாக நான் இருக்கிறேன் அங்கு நீ வா என்று சொன்னார் எழுந்து பார்த்தால் காட்டுபன்றி ஒன்று தெரிந்தது. அதை வேட்டையாடி கொண்டு பின் தொடர்ந்தான் அது சிவ பெருமான் இருக்கும் இடத்திற்கு சென்றடைந்தது அப்பொழுது திண்ணனன் அந்த இடத்தில் சிவபெருமானை பார்த்ததும் எத்தனையோ விதமாக பார்த்து தன்னுடைய வீட்டுக்கு வரும்படி வேண்டினான், மன்றாடினான் ஆனால் தனது வேண்டுகோள் பளிக்கவில்லை. அதனால் அவன் அங்கேயே நின்று விட்டான் தினமும் அங்கேயே தூங்கினான் காலை எழுந்த உடன் காளஹஸ்த்தி மலை காட்டுக்குள் சென்று பன்றியை வேட்டையாடி அதை தீயில் கொளுத்தி அதை ருசி பார்த்து இறைச்சி எது நன்றாக உள்ளதா அதை எடுத்து தேக்கு இலையில் வைத்து பழம், புஷ்ப்பம், வில்வம் சிவ பெருமான் மேல் போட்டு வாய் கலசமாக பொன்முகலியில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து சாமி மேல் ஊற்றி மாமிசத்தை சாமிக்கு படைத்தான் அந்த சமயத்தில் சிவ கோச்சாரியார் குடும்மி தேவர்க்கு தினந்தோறும் செய்யும் நித்ய, தூப, தீப, நெய் வேதனம் செய்வதற்க்கு வந்தார். எத்தனையோ ஆண்டுகாலமாக பூஜை செய்துவந்த சிவலோகசாரியார் திண்ணன் பூஜை அங்கும் இங்குமாக எச்சில் மற்றும் அசிங்கமாக இருந்தது. சுவாமி ஏன் சில நாட்களாக உங்கள் சன்னதி இதுபோல் ஆவதற்க்கு காரணம் என்ன என்று வேண்டினான் வேண்டிய உடன் சுவாமியின் குழல் சிவகோச்சிரியர்க்கு கேட்டது இன்ற தினம் வேடன் ஒருவன் வந்து பூஜை செய்கிறான். அவன் மிகுந்த அன்பு கொண்டவன் மிகுந்த பக்தி கொண்டவன் அவனுடைய பக்தி எவ்வாறு

உள்ளது என்று நீயும் பார்க்கலாம் வா. சிவலோகச்சாரியார் மறைந்து கொண்டார் வேடன் அங்கு வந்து சுவாமி வாயினால் பொன் முகல் நதிநீர் எடுத்து சுவாமிக்கு அபிஷேகம் செய்து புஷ்பம் வில்வம் தாமரைபூ சிவலிங்கமேனியின் சாத்தி மாமிசத்தை தேக்கு இலையில் வைத்து படைத்தான் சாப்பிடும்படி சொன்னான் கட்டி தழுவினான் தன்னுடைய அன்பை வெளிபடுத்தினான்.

சுவாமி சாப்பிடவில்லை ஆனால் அவருடைய கண் ஓரமாக தண்ணீர் ஒழுகியது. சிறிது நேரத்தில் அது அதிகமானது. அதை பார்த்த திண்ணன் சுவாமிக்கு கண்நோய் வந்துள்ளது என்று மிகவும் மனம் வருந்தினான் எதாவது வைத்யம் செய்து கண்ணில் இருந்து கண்ணீர் வருவலே தடுக்கவேண்டும் துணியை மடித்து வாயில் ஆவிறி பிடித்து கண்ணுக்கு ஒத்தினான் - தண்ணீர் நிற்க்கும் வரை ஒத்தினான் தாமரை பூ எடுத்து கண்ணுக்கு ஒத்தினான் காட்டுக்குள் சென்று தேடி தேடி பச்சிலை மருந்து எடுத்து வந்து மருந்து சாதித்தினான் எதற்கும் கண சரியாகவில்லை - அதற்க்குள் கண்ணில் இருந்து ரத்தம் ஒழுக ஆரம்பித்தது. உடனே திண்ணன் மனதில் கண்ணுக்கு கண்தான் மருந்து என்று நினைத்தான். தன்னுடைய கண்ணை எடுத்து சுவாமி கண்ணுக்கு பொருத்தினான். உடனே சுவாமியின் கண் நன்று ஆனது உடனே இரண்டாவது கண்ணில் இருந்தும் ரத்தம் வந்தது. உடனே திண்ணன் சிரித்தான் ஓ சாமி உன்னுடைய ஆசியினால் எனக்கு இரண்டாவது கண் உள்ளது அதை உனக்கே சமர்பிக்கிரேன் என்று ரத்தம் ஒழுகும் கண் அருகில் தன்னுடைய கால் கட்டை விரல் அடையாளத்திற்க்கு வைத்துகொண்டு இரண்டாம் கண்ணை பெயர்க்க முயின்றான் உடனே சிவ பொருமாள் திண்ணுடைய பக்தியை பார்த்து உமாமகேஸ்வர்களாக ரிஷய வாகனத்தில் காட்சி கொடுத்து திண்ணனை நில்! அது! கண்ணப்பா என்று தனது வலபகத்தில் நிறுத்தினார் இதை பார்த்த சிவகோச்சரியார் பக்தி என்றால் அது கண்ணப்பர் உடைய பக்திதான் என்று

சொன்னார். கண்ணப்பர் ஆறு நாட்களில் முக்தி பெற்றதனால் கண்ணப்பர் ஆறு இடங்களில் இருக்கிறார் விவரம் 1. சுவாமி சன்னதி, 2. மாடவீதியில் நிறுதி மூலையில், 3. கோயில் மாடிமேல், 4. திருக்காளத்தி மலைமேல், 5. கோயில் உள்பிரகாரம் காசி லிங்கம் அருகில், 6. நந்தவன தோட்டம், கண்ணப்பருக்கு குரு பூஜையை தை மாதம் மிருகசீர்சம் நடசத்தில் ஆண்டு தோறும் மாலை 6.00 மணியளவில் சிறப்பு அபிஷேக ஆரதனை நடைபெறுகிறது. கண்ணப்பருக்கு மாசி மாதத்தில் மகாசிவராத்தி கொடியேற்றும் போது கண்ணப்பன் கொடி யேற்றம் நடைபெறும். இன்றும் கண்ணப்பனை தரிசனம் செய்வதற்க்கு காளத்தி மலைக்கு செல்கிறார்கள்.

ராகு - கேது க்ஷேத்திரம் :

புத்திர சோகத்திற்க்கு ஆளான வசிஸ்ட்ட மகரிஷிக்கு அவருடைய தவ பலத்தால் பஞ்சமுக நாக லிங்கேஸ்வரர் தரிசனம் கொடுத்தார் இந்த நாகலிங்கத்தை பிரம்ம தேவற்கூட பூஜை செய்துதான் இந்த ராக ரூபசஷம் தான் சேத்திரம் ராகு-கேது க்ஷேத்திரமானது இப்பொழுது இந்த திருக்கோயிலில் சர்ப தோஷம், ராகு - கேது தோஷம், கலத்திர தோஷம், சந்தான தோஷம் இருப்பவர்கள் இத்திருக்கோயிலில் பரிகார நிவர்த்தி செய்து கொள்கிறார்கள். இங்கு சுவாமிக்கு நவகிரக கவச்சம் அலங்கரிக்க படுகிறது.

தட்க்ஷிணாமூர்த்தி :

திருக்கோயில் நூழைவாயில் தெற்க்கு வாசல் உள்ளது. தட்க்ஷிணாமூர்த்தி சின்முத்திரையில் தரிசனம் கொடுக்கிறார் இந்த தட்க்ஷிணாமூர்த்திக்கு வியாழன் காலை 9.30 மணியளவில் சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது. மாதந்தோறும் ஆயிலிய நடசத்திரத்தில் தட்க்ஷிணாமூர்த்தி உற்சவர் 274 பாடல் பெற்ற திருத்தலங்கள் குறிபிட்ட சில தலங்களில் மட்டும் தான் உற்சவர் உள்ளது என்பது குறிப்பிடதக்கது.

சுவாமியின் அருள் பெற்றவர்கள் :

பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்கள் பரத்வாஜ மகரிஷி, வசிஸ்ட்டர், அகஸ்ய மகரிஷி, ரோமசரிஷி, கரூர்சித்தர் ஜகத்குரு ஆதிசங்கரர், குமாரகுருபரர், கண்ணப்பர், கமலை ஞான பிரகாசர், திருவாடுதுறை நமசிவாயமூர்த்திகள் சைவ மதகுருமார்கள், நால்வர் அப்பர், சுந்தரர், திருஞானசம்ந்தர், மாணிக்க வாசகர், தூர்ஜட்டி நக்கீரர், யாதவ பிரபுக்கள் மதுரையில் இருந்து வந்த வேசிகன்னிகள் இவர்கள் அனைவரும் இந்த க்ஷேத்திரத்தில் சுவாமி தரிசனம் செய்த பலரில் முக்கியமானவர்கள்.

தீர்தங்கள் :

திருவேதவியாசமுனிவர் முக்கியமான 36 தீர்த்தங்கள் குறிப்பிட்டுள்ளார் அதில் சகஸ்ர லிங்க தீர்த்தம், ஹரஹர தீர்த்தம், பரத்வாஜ தீர்த்தம் (தாமரைகுளம்) மார்கண்டேய தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், சூர்ய தீர்த்தம், சந்திர தீர்த்தம், பொன்முகிதீர்த்தம் இவைகள் அனைத்து தட்ஷண கயிலாயமலையில் முக்கியமான தீர்த்தங்கள். இதில் நீராடினால் பாவங்கள் தீரும். புண்ணியம் சேறும். சகல நன்மைகள் வந்து சேரும் என்பது குறிப்பிடதக்கது.

சகஸ்ர லிங்க கோனை :

(மிக பெரிய அருவி) இது ஒரு சிறப்பான அழிகிய தோற்றமுள்ள இடம். இந்த அருவியில் சிவலிங்கம் உள்ளது. இங்கு பரமேஸ்வர், தேவைதகளுக்கு தரிசனம் கொடுக்கிறார். உமாதேவி என்ற ஞானபிரசுணாம்பிகை தேவந்திரங்களுக்கு ஞான உபதேசம் செய்தார்கள். அனேக மகரிஷிகள், சிஷியர்களுக்கு தத்துவஉபதேசம் செய்த்து இந்த இடத்தில்தான், ஸகஸ்ர லிங்கம், பிரதிஷ்டை செய்தார்கள். இதன் அருகில் தான் (அருவி) உள்ளது. இதற்கு பெயர்தான், ஆயிரம் லிங்க அருவி (வெய்லிங்ககோனா) என்பது.

பாதாளகங்கை சரஸ்வதி தீர்த்தம் :

திருகோயிலில் உள் பிரகாரத்தில், (பேச்சு சரி வராதவர்கள்)

இந்த தீர்த்தம் சாப்பிட்டால் நன்றாக பேசுவார்கள்.

பரத்வாஜ தீர்த்தம் :

திருக்காளத்தி மலையில் உள்ள குளத்திற்கு பெயர்தான் (லோபாய்) என்று சொல்வார்கள் பரத்வாஜ் முனிவர் தபசு செய்தார் என்ற சொல்லப்படுமிடம். பைரவர் தீர்த்தம், மார்கண்டேய தீர்த்தம் மயூரதீர்த்தம் இங்குதான் உள்ளது.

பரவாரி மூர்த்திகள் :

பிருகுமகரிஷி, அர்தனாரீஸ்வரர் லிங்கம் பிரத்திஷ்டை செய்தார், அகஸ்திய மகரிஷி பிரிதிஸ்ட்டை செய்த நீலகண்டடேஸ்வரர் லிங்கம், மணிகண்டேஸ்வரர் பிரிதிஸ்டை செய்தார். வியாசர் பிரதிஸ்டை லிங்கம் மிகவும் பெயர் பெற்றது. மார்கண்டயர் பிரதிஷ்ட லிங்கம் பிரதிபுமூர்த்தி மூர்த்திஞ்சய லிங்கம், மார்க்கண்டய காலத்தில், மரணத்தில் இருந்து காத்த சகஸ்ர லிங்கம். இந்திராதி தேவர்கள், அலங்கார மண்டபம், அதன் அருகில் மோட்க்ஷ கணபதி, பால கணபதி, சுந்தரகணபதி மூன்று பிள்ளையார் சன்னதி உள்ளது. அதன் அருகில் தான், மேல்புரத்தில் பல்லியும் உள்ளது. சுட்க்ஷமநந்தி, ஶ்ரீ பக்த கண்ணப்பர், காசி லிங்கம், ராமேஸ்வர லிங்கம், வள்ளி தேவசேனா சுப்பரமணியர், வள்ளபகணபதி, லஷ்மிகணபதி, சக்திகணபதி, ஶ்ரீகிருஷ்ண தேவராயர், ஶ்ரீராமர், சீதாதேவி, லஷ்மனர், ஆஞ்சிநேயர் மற்றும் பரசுராமர், சனிபகவான், சப்பதரிஷிகள் அனைவரும் பிரதிஷ்டை செய்துள்ள லிங்கங்கள் உள்ளது. கனகதுர்கை, உடுப்பி சுப்ரமண்ணியர், சிவகாம சுந்தரி, நடராஜர் சன்னதி உள்ளது.

இத்திருகோவில் சுவாமி சன்னதி மேற்கு நோக்கி அமைந்துள்ளது. எதிர்புரத்தில் ஸ்ரீ வெங்கடேச பெருமாள், வீரராகவர் சன்னதி உள்ளது. இத்திருகோவில், திரு ஞான பூங்கோதை (அம்மன்) கிழக்கு நோக்கி உள்ளது. ஈசான மூலையில், தெற்கு நோக்கி காலபைரவர் சன்னதியும், பட்டள பைரவர் சப்தமாதாகள் நரசிம்மர் பிரிதிஷ்டை லிங்கம் உள்ளது. ஒவ்வொரு செவ்வாய் தோரும் மற்றும் அஷ்டமி திதியில் காலபைரவருக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனையும் இரவு 7.30க்கு உற்சவம் நடைபெரும் (ஆந்திரமாநிலம்) இத்திருக்கோவிலில் மட்டும் தான் தட்க்ஷணாமூர்த்தி, காலபைரவர் மற்றும் 63 நாயனமார்கள் உற்ச்சவமூர்த்தியும் உள்ளது என்று குறிப்பிட தக்கது.

மண்டபங்கள் :

சிற்ப கலைகல் மிகுந்த மண்டபம் மிக உயர்ந்த அழிகிய தூண்கள் வண்ணம் சித்திரங்கள் உள்ளது. நாகேஸ்வர மண்டபம், குர்லா மண்டபம், நூறு கால் மண்டபம், பதினாரு கால் மண்டபம், கோட்டை மண்டபம், நுறு கால் மண்டபம் உள்ள சிறபங்கள் அழகாக உள்ளது. இதுதான் தோற்றம். கி.பி. 1529ல் ஸ்ரீ கிருஷ்ண தேவர் ராயர் தம்பி அச்சுதராயர், இவருடைய பட்டாபிஷேகம் உற்சவம் இந்த மண்டபத்தில் தான் நடந்தது. கோட்டை மண்டபம் மிக பிரபல்மானது, அம்பாள் சன்னதி அஷ்ட்டோத்தர லிங்கம் வெளியில் மேல் புரத்தில் வர்ண சித்திரங்கள் உள்ளது.

நடராஜர் ரங்கஸ்தலம் :

பலலவர் காலத்தில் சிற்ப கலைகள் மிகுந்த நாட்டிய மண்டபம் சபா மண்டபம் என்று சொல்வார். நாட்டித்திற்கு சிறப்பாக இங்குதான் நாட்டிய கலைகள் நடந்தன. இங்கு பஞ்சமுக ஈஸ்வர சுவாமி உள்ளது. மிக அபூர்வமான பல்லவர் காலசிற்பங்கள் உள்ளது.

கனகதூர்கை மலை உள்ளது. நவராத்திரிரி உற்சவம் மிகவும் சிறப்பாக நடக்கும், **விஞ்ஞானகிரிக்ஷேத்திரம் ஸ்ரீ** சுப்பரமணிய சுவாமி மலையும் உள்ளது. ஆடி கிருத்திகை திருவிழா மற்றும் தெப்போ உற்ச்சவம் நடைபெறும் அருகில் தெப்பகுளம் உள்ளது.

திருகோவில் வசதிகள் :

திருக்கோவிலில் அறங்காவலர் குழ உள்ளது. மற்றும் நிர்வாக அதிகாரி மற்றும் ரிஜீனன் ஜாயின் கமிஷனர் இவர்கள் நிர்வாகத்தில் கோவில் நடக்கிறது.

கோயில் ஆதாயம் :

ஸ்ரீ காளஹஸ்தி சுவாமி தேவஸ்தான ரூம்கள் சங்கரமுனி காம்ளக்ஸ் திருநேத்திரா கெஸ்ட்ஹவுஸ், ஸ்ரீ பக்தர் கண்ணப்பர் கெஸ்ட்ஹவுஸ், பரத்வாஜ் சதர்ன் பக்தர்கள் வசதிக்கு தேவஸ்தான ரூம்கள் உள்ளது. இத்திருகோவிலில் வருமானம் சுமார் 25 கோடி தாண்டி உள்ளது.

இத்திருக்கோவில் :

இத்திருக்கோவில் ஆகமவிதி முறைப்படி பூஜைகள் தினமும் நடைபெறும். தினமும் நான்கு கால் அபிஷேகம் ஆராதனைகள் பூஜைகள் நடைபெறும் மற்றும் தினமும் பக்தர்கள் அருள் காணிக்கைகள் மூலம், நித்ய அன்னதானம் நடைபெறுகிறது. இந்த க்ஷேத்திரத்தில் பிரவேசம் செய்தால் முக்தி என்றும் இந்த ஸ்ரீ காளஹஸ்திரியை தட்க்ஷண காசி என்றும் சொல்வார்கள்.

இந்த ஸ்ரீ காளஹஸ்திரியில் திருஞான சம்பந்தர், திருநாவுகரசர், கிருசுந்திரமூர்த்தி நாயனார், மூவரும் பாடல் பதிபங்கள் பாடியுள்ளனர், கயிலைபாடி / காளத்திபாதி எந்று நக்கீரர் பாடியுள்ளார். அருள்மிகு ஞானபூங்கோதை உடன் உறை திருக்காளத்தி நாதரின அருள் பெரும்படி அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

பக்தர்களுக்கு வேண்டுக்கோள் :

அநேக சைவ க்ஷேத்திரத்தில் ஸ்ரீ காளஹஸ்தியில் மாகா க்ஷேத்ரம். இது பழம் பெருமை வாய்ந்த க்ஷேத்திரம். இந்க்ஷேத்திரம் தட்க்ஷிண கயிலாயம் என்பதும், சக்திய விரதபாஸ்கர க்ஷேத்திரம், ஸ்த்யோ முக்தி க்ஷேத்திரம், சிவானந்த நிலையும், கயவனம், கஜாராணியம் என்று சொல்லபடும் இந்த தலத்தில் சிலந்திலியானை பாம்பு மூன்றும் சிவ பெருமானை வழிபாடு செய்து சாப விமோசனம் செய்து மோட்சம் பெற்றது. ஆகையால் தான் ஸ்ரீ–காள–ஹஸ்தி என்று இந்த க்ஷேத்திரம் பெயர் பெற்றது.

தானத்தில் சிறந்தது அன்னதானம் :

இத்திருகோவில் தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு தினந்தோறும் மத்திய உணவு (அன்னதாநம்) ஏற்பாடு செய்து உள்ளோம். அன்னதானம் செய்வதால் சகல நன்மையும் உண்டாகும். தாணத்தில் சிறந்தது அன்னதானம், அன்னதானம் செய்வது வேதகாலம் முதல், திருமுறைகாலம் அன்றில் இருந்து இது தொர்ந்து வருகிறது. ஆகையால் நம் முன்னோர்கள் நடைமுறையில் வந்து கொண்டு உள்ளது. ஆகையால் அன்னதானம் செய்து வந்தால் நல்லது. பவித்திர புணணிய க்ஷேத்திரத்தில் அன்னதானம் செய்து வந்தால் கோடி புணணியம் கிடைக்கும். ஸ்ரீ ஞானம்பிகை அம்பாளுக்கு நிதத்ய அன்னதானம் செய்ய விரும்புவோர்கள் ஸ்ரீ காளஹஸதிரி சுவாமி அன்னதானம் செய்ய விரும்புபவர்கள் நன்கொடையாக ரூ. 1116 அதற்க்கு மேலும் செலுத்தி அதன் வருமானத்தில் (வட்டியில்) ஆண்டுதோறும் 20 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (உங்களுக்கும் முன்பாகவே கடிதம் மூலம் தெரிவிக்கு படும்.)

ஸ்ரீ காளஹஸ்த்திஸ்வரர், ஸ்ரீ ஞானம்பிகை அம்பாள் நித்திய அன்னதானம் நடைபெறுகிறது. நீங்களும் இதில் பங்கு

கொண்டு தங்கலால் முடிந்த நன்கொடை செலுத்தி இறைவன் அருள் பெறவேண்டுகிறோம்.

பிரியாகை, காசி, திருப்பதி, ஸ்ரீசைலம், மகா நந்தி இந்த க்ஷேத்திரம் எல்லாம் இடத்தில் அன்னதானம் செய்தால் எவ்வளவு புண்ணியமோ அதே புண்ணியம் (துட்க்ஷனகாசி) என்று கூறப்படும் ஸ்ரீகாளஹஸ்த்திரியில் அதே புண்ணியம் கிடைக்கும் என்பது பெரியவர்கள் வாக்கு. இடம் : 1. செலுத்தியவர் பெயர், நட்சத்திரம், ராசி, விலாசம், 2. அன்னதான செய்பவர் பெயர், விலாசம், 3. நீங்கள் செலுத்திய ரூபாய்க்கு வரும் வட்டியுடன் ஆண்டுதொரும் தங்கள் குறிப்பிட்ட தேதியில் அன்னதானம் நடத்தப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி : இ.ஓ. ஸ்ரீகாளஹஸ்த்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம், ஸ்ரீகாளஹஸ்த்தி – 517 644, சித்தூர் மாவட்டம், ஆ.பி. அவர்களின் பெயரில் எந்த வங்கியிலிருந்து ஆனாலும் டி.டி. எடுத்து அனுப்பலாம்.

ராகு - கேது கால சர்பதோஷ பூஜை :

ராகு-கேது க்ஷேத்திரத்தில் பிரபலம் அடைந்த ஸ்ரீகாளஹஸ்த்தீஸ்வர கோவிலில் அதிக மகிமை கூடிய பூஜை "ராகு-கேது சர்பதோஷ பூஜை". ராகு கேது தோஷமுள்ள வர்கள், கிரஹ தோஷமுள்ளவர்கள், சர்ப தோஷமுள்ளவர்கள், திருமணம் ஆகாதவர்கள், குழந்தைகள் இல்லாதவர்கள், நீண்டகால பிரச்சனைகள் இருப்பவர்கள் இந்த கோவிலில் ராகு கேது சர்ப தோஷ நிவாரண பூஜைகள் இந்த செய்தால் தோஷ நிவாரணம் ஆகும். தவராமல் நல்ல விஷயங்கள் நடக்கும் என்று பக்தர்களுடைய நம்பிக்கை. இந்த க்ஷேத்திரத்தில் எவ்வலவோ முக்கியதவம் பெற்ற இந்த பூஜைகள் செய்யுவதற்க்கு வெளிநாடுகளில் இருந்து 1000 கணக்கில் பக்தர்கள் ராகுகேது சர்பதோஷ நிவாரண பூஜை

செய்துகொண்டு நல்லபலனை பெற்று மருபடியும் வந்து தரிசிக்கரார்கள்.

பூஜை கட்டணம்	:	ரூ. 300/-
பிரத்யேக ராகு கேது பூஜை	:	ரூ. 750/-
கோவில்குள்	:	ரூ. 1500/-
பிரத்யேகம்	:	ரூ. 2500/-

பூஜை வேலைகள் :

காலை 6.00 மணியிலிருந்து இரவு 7.45 மணி வரை, பூஜை, ஆசீர்வாதம், பிரத்யேக தரிசனம்.

குறிப்பு : பூஜைக்கு தேவைபட்ட அனைத்து பொருட்களை தேவஸ்தானம் டிக்கட்கவுண்டரில் கொடுக்கப்படும்.

ஸ்ரீ ராகுகேது காலசர்ப தோஷ நிவ்ருத்திரஸ்து.

அபிஷேகங்கள் :

தென் கயிலாயம் பெயர் பெற்ற ஸ்ரீ ஞானபிருசுனாம்பா சமேத ஸ்ரீகாளஹஸ்த்தீஸ்வர சுவாமி தினந்தோறும் புன்யக்ஷேத்திரத்தில் ஓவ்வொரு நாளும் 4 காலங்களில் அபிஷேகங்கள் நடைபெறும். இந்த சமயத்தில் ஆர்ஜித சேவை பக்தர்கள் கலந்த கொள்ளலாம்.

ருத்ராபிஷேகம் :

தினமும் 4 காலங்களில் நடைபெறும் பக்தர்கள் ரூ. 600 செலுத்தி இந்த அபிஷேகத்தில் கலந்து கொள்ளலாம்.

பாலாபிஷேகம் :

பக்தர்கள் ரூ. 100 செலுத்தி கலந்து கொள்ளலாம். (2 லீட்டர் பாலை பக்தர்கள் கொண்டு வரவேண்டும்)

பஞ்சாம்ருத அபிஷேகம் :

பக்தர்கள் ரூ. 300 செலுத்தி கலந்து கொள்ளலாம்.

பச்சை கர்பூர அபிஷேகம் :

பக்தர்கள் ரூ. 100 செலுத்தி கலந்து கொள்ளலாம்.

சஹஸ்ரநாமார்ச்சனை :

பக்தர்கள் ரூ. 200 செலுத்தி கலந்து கொள்ளலாம்.

சனீஸ்வர அபிஷேகம் :

பக்தர்கள் ரூ. 150 செலுத்தி கலந்து கொள்ளலாம்.

தேவஸ்தானத்தில் சேவைகள்

நித்ய கல்யானோத்ஸவம் :

தினமும் அபிஷேகத்திற்க்கு பிறகு சுவாமி அம்பாளுக்கு நித்ய கல்யானோத்ச்சவம் நடத்தப்படும். பக்தர்கள் ரூ. 501 செலுத்தி கலந்து கொள்ளலாம்.

ஊஞ்சல் சேவை :

பௌர்ணமி அன்று ஸ்ரீ சுவாமி அம்மனுக்கு ராயல மண்டபத்தில் ஊஞ்சல் சேவை நடைபெறும். இந்த சேவைக்கு பக்தர்கள் ரூ. 5000 செலுத்தி கொள்ளலாம்.

நந்தி சேவை :

பக்தர்கள் கேட்ட நாளில் ரூ. 10,000 செலுத்தி அதே நாள் இரவு வெள்ளி நந்தி வாஹனத்தின் மேல் சுவாமி, சிம்ம வாஹனத்தில் அம்மன் அலங்கரித்து ஊர்வலம் நடைபெறும்.

மேன்மை கொள் சைவ நீதீ விளங்க உலகம் எல்லாம் கலை மரிந்த சீர் நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்.

அனைத்து கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீகாளஹஸ்திரி தேவஸ்தானம்

ஸ்ரீகாளஹஸ்திரி - 517 644,

சித்தூர் மாவட்டம் (ஆ.பி.) 08578-220173

திருகோவிலில் நடைபெறும் சேவைகள் (கட்டணம்)

சிறப்பு தரிசனம், சுவாமி, அம்மன்	50/-
அர்ச்சனை	25/-
சகஸ்ரநாம அர்ச்சனை	200/-
திரிசதி அர்ச்சனை	125/-
பால் அபிஷேகம்	100/-
பச்ச கற்பூரம் அபிஷேகம்	100/-
ருத்ரா அபிஷேகம்	600/-
பஞ்சாமுரத அபிஷேகம்	300/-
சனிஸ்வர அபிஷேகம்	150/-
பிரதோஷ நந்தி அபிஷேகம்	120/-
மகா தீபாராதனை	200/-
கோ பூஜை	50/-
சுப்பரபாதம்	50/-
ராகு, கேது, சர்பதோஷ நிவாரண பூஜை	300/-
ராகு, கேது, சர்பதோஷ நிவாரண பூஜை	750/-
ராகு, கேது, சர்பதோஷ நிவாரண பூஜை	1500/-
ராகு, கேது, சர்பதோஷ நிவாரண பூஜை	2500/-
ஆசீர்வாதம் தரிசனம்	500/-
மகா பிரசாதம்	10/-
பவுர்னமி ஊஞ்சல் சேவை	5000/-
நந்தி சேவை	10000/-

அனைத்து கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீகாளஹஸ்தி - 517 644, சித்தூர் மாவட்டம். ஆ.பி.

✆ : 222240



ஆயிரம் லிங்கம் மலை	- 8 கி.மி.
தட்சணாகாளி கோவில்	- 6 கி.மி.
சுக்க பிரமா ஆசரமம்	- 2 கி.மி.
பிரசன்ன வரதராஜ சுவாமி கோவில்	- 0.5 கி.மி.
கனகாசலம்	- 0.5 கி.மி.
விக்னான கிரி	- 1 கி.மி.
தர்மராஜ சுவாமிக்கோவில்	- 1.5 கி.மி.
முத்தியால அம்மன் கோவில்	- 0.5 கி.மி.
பரத்வாஜ தீர்த்தம்	- 0.5 கி.மி.